# ஆறாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு ஆய்வுக் கட்டுரைகள்

# PROCEEDINGS OF THE SIXTH INTERNATIONAL CONFERENCE - SEMINAR ON TAMIL STUDIES

## 1987

மலேசிய உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL ASSOCIATION FOR TAMIL RESEARCH, MALAYSIA

54

# அகத்தியரும் சித்த மருத்துவமும் (ஓர் ஆய்வு)

வி. சுப்பிரமணியன்

தமிழர் நாகரிகம், உலக நாகரிகங்கள் அனைத்திலும் சிறப்பு வாய்ந்தது ஆகும். மற்ற உலக நாகரிகங்களைவிடத் தொன்மை வாய்ந்தது தமிழர் நாகரிகம் என எண்ணப்படுகிறது. மனிதன் தோன்றிய காலந்தொட்டே நோயும் தோன்றிவிட்டது. நோய் தோன்றும்பொழுது அதைத் தீர்ப்பதற்குரிய ஒரு மருத்துவ முறையும் தோன்றியே ஆக வேண்டும். இப்படித் தோன்றியதுதான் உலகத்தின் பல்வேறு மருத்துவ முறைகளும்.

தமிழர் நாகரிகத்துடன் இணைந்து தோன்றியதுதான் தமிழ் மருத்துவம் என்னும் சித்த மருத்துவம் ஆகும். சித்தர்கள் பலர் வாழ்ந்திருந்தார்கள். எனினும் முக்கியமாகக் கருதப்படுபவர்கள் 18 சித்தர்களாவர். அவர்கள் அகத்தியார், நந்திதேவர், திருமூலர், புலத்தியர், புண்ணாக்கீசர், பூனைக்கண்ணர், இடைக்காடர், போகர், கருவூரார், கொங்கணவர், காளாங்கி, அழுகிணிச் சித்தர், அகப்பேயர், பாம்பாட்டி, தேரையர், குதம்பைச் சித்தர், சட்டைமுனி நாதர், புலிக்கையீசனார் என்பவர் ஆவர். சித்தர்களுக்கெல்லாம் தலைவர் எனக் கூறப்படுபவர் சிவபெருமான் ஆவார். சித்த மருத்துவமானது சிவன் சக்திக்கும், சக்தி நந்திதேவருக்கும், நந்திதேவர் அகத்தியருக்கும் சொன்னதாகக் கூறப்படுகிறது.

இச் சித்தர்கள் சொன்ன எளிய சில தத்துவங்களின் அடிப்படையில்தான் தமிழ் மருத்துவம் சிறப்புப்பெற்றுள்ளது. சித்தர்கள் தோற்றுவித்த இத் தமிழ் மருத்துவம் உடலுக்கு மட்டுமல்லாது உயிருக்கும் மருத்துவம் அளிக்கும் முறையாகும். உடலையும் உயிரையும் அழியாமல் காத்துச் சித்திபெறச் செய்யும் மருத்துவம் என்பதால் சித்த மருத்துவம் எனப்பட்டது.

தமிழ் மருத்துவத்துறையில் அகத்தியர் பெயரால் வழங்கும் நூல்களே மிகுதியாகும்.

*"பொதிகை மலைமுனி யோதிய நூலே"*

*"தென்திசை வாழு மகத்திய முனிவர்*
*திறமுட னுரைத்தனர் பரிந்தே"*

*"மூதறி முனிவன் சொன்ன மொழிப்படி"*

*"குறுமுனி யுரைசெய் தாரே"*

*"மாமுனிவ ருரைத்த நூலே"*

*"மலைமுனிவர் இயம்பி னாரே"*

*"மலைமுனிவர் பகர்ந்த நூலே"*

போன்ற பல நூல்களில் வரும் தொடர்களைக்கொண்டு அறியலாம். ஆனால், தற்பொழுது கிடைக்கக்கூடிய அகத்தியர் பெயரால் வழங்கப்படும் நூல்களைப் பார்க்கும்பொழுது அனைத்து நூல்களையும் எழுதியவர் ஒரே அகத்தியர்தாமா, ஒரே பரம்பரையைச் சார்ந்தவர்களா, பல்வேறு காலத்தில் வாழ்ந்த ஒரே பெயர்கொண்ட பல சித்தர்களா என எண்ண வேண்டியுள்ளது. மேலும், முதல் சங்க இலக்கண நூலான 'அகத்தியம்' என்னும் நூலை எழுதிய அகத்தியரே இம் மருத்துவ நூல்களையும் எழுதியிருப்பாரா என்பதும் சந்தேகத்திற்கிடமாக உள்ளது. ஏனெனில் தற்பொழுது அகத்தியர் பெயரால் வழங்கப்படும் நூல்களில் இலக்கண மாறுபாடு பெரிதும் காணப்படுகிறது. கர்ண பரம்பரையாக–செவிவழிப் பாடங்களாகவே இருந்து பின்னால் எழுத்துக்கு வரும்பொழுது பல வேறுபட்ட மாறுதல்களை அடைந்திருக்கலாம் எனவும் ஒரு கருத்து உள்ளது. அல்லது ஒரு குறிப்பிட்ட கருத்தினை மையமாகக்கொண்டு பின்னால் வந்தவர்கள் தம் சிந்தைக்கேற்பப் பாட்டாக வடித்தும்

கொண்டிருக்கலாம் எனவும் எண்ணத் தோன்றுகிறது. சான்றாக "சுயமாக்கினி செந்தூரம்" என்னும் மருந்து அகத்தியர் அருளிச்செய்த நூல்களான அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம், அகத்தியர் 2,000 ஆகிய இரு நூல்களில் ஏறக்குறைய ஒரே முறை, வித்தியாசமான இரு பாடல்களில் கூறப்பட்டுள்ளது. அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கத்தில்,

*"கேளப்பா சுயமாக்கினி சொல்லக் கேளு*
*புகழான ரசமூன்று நாற்ற மிரண்டு*
*காமப்பா காந்தசெந் தூரம் நாலு*
*கலங்காதே சிலையிரண்டு சிவப்பி ரண்டு*
*தாமப்பா மெழுகு பொடிதா னொன்று*
*தவறாமல் குமரிச் சாற்றைப்புக் கேளு*
*ஆமப்பா பட்சமொன்று அரைத்து ருட்டி*
*அப்பனே இஞ்சிரசந் திரிகடுகு தானே"*

என்று கூறப்பட்டுள்ளது. அதே சரக்குகளைச் சேர்த்துச் செய்யப்படும் அதே நோய்க்கு வழங்கப்படும் அதே பெயருள்ள மருந்து அகத்தியர் 2,000 எனும் நூலில் கீழ்க்காணும் பாடலாய்க் கூறப்படுகிறது.

*"நாலு சூதம் சிலையிரண்டு நல்ல கந்தக மதற்கு ரெட்டிக்*
*காலக் கந்த மதுக்கு ரெட்டி கடிய லோகத்துக்கு ரெட்டி*
*ஏலங் குழலார் குமரிச் சாற்றா லரைத்து இணக்கமுடன்*
*தாயத்தின் பின்னே தப்பத் தணலா யெரியுங் கண்டாயே"*

என்பதாகும்.

இதனைப் பார்க்கும்பொழுது கருத்து அகத்தியரின் மூலக் கருத்து என்றும், பின்னால் வந்த அவரின் சீடர்கள் அதைத் தம் வசதிக்கேற்ற வாறு இரு பாடல்களாகப் பாடியிருப்பர் என்றும் கொள்ள வேண்டியுள்ளது. தற்காலத்தில் கிடைக்கக்கூடிய அகத்தியர் நூல்கள் அனைத்துமே அகத்தியரின் கருத்தினைக் கொண்டு பிற்காலத்தவரால் எழுதப்பட்டனவேயாம்.

இந் நூல் முற்காலத்துச் சித்தர்களால் இயற்றப்பட்ட வைத்திய நூல்கள் இரண்டு லட்சமென்றும், வாத நூல்கள் ஒரு லட்சம் என்றும் கூறப்படும். அவை போட்டிகளாலும், பொறாமையினாலும் கடலுக்கும்

நெருப்புக்கும் இரையாக்கப்பட்டவை போக எஞ்சியிருப்பன சிலவே என்னும் ஒரு கருத்தும் எண்ணப்படுகிறது.

## அகத்தியர் காலம்

அ. சிதம்பரனார் எழுதிய அகத்தியர் வரலாறு என்னும் நூலில் பொதியமலை அகத்தியர் என்னும் குறுமுனியின் காலம் 16,000 ஆண்டுக்கு முன் என்றும், அவருக்குப் பிறகு கி.பி. 19ஆம் நூற்றாண்டுவரை முப்பத்து ஏழுக்கும் மேற்பட்ட அகத்தியர் வாழ்ந்திருந்தார்கள் என்றும், அவர்கள் பல்வேறு இனத்தைச் சார்ந்தவர்கள் என்றும் கூறுவர். எனவே, அகத்தியர் ஒருவரே அல்லர் என்பது பல்வேறு காலகட்டத்தில் பலரும் அகத்தியர் பெயரால் இருந்தனர் என்பதும் தெரியவருகிறது. சித்த வைத்திய அகராதியில் திரு. சாம்பசிவம் பிள்ளை, டாக்டர் கால்டுவெல் போன்ற தமிழ் மூதறிஞர்கள் அகத்தியர் காலத்தைக் கி.மு. ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டு என்று கூறினாலும் உண்மையான காலத்தை அறிவது மிகவும் கடினம் என்று கூறுகிறார்கள். அகத்திய முனிவரைப்பற்றிய பல செய்திகள் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலும் உள்ளன.

## அகத்தியர் நூல்கள்

அகத்தியர் பேரகத்தியம், சிற்றகத்தியம் என்னும் இரண்டு தமிழ் இலக்கண நூல்கள் இயற்றியதோடல்லாமல் இரசவாதம், வைத்தியம், சோதிடம், யோகம், ஞானம், நிட்டை, பூஜாவிதி முதலிய பல துறைகளைப் பற்றியும் நூல்கள் இயற்றியுள்ளார். தற்பொழுது கன்னியாகுமரிப் பகுதியில் சிறப்பாகக் கூறப்பட்டு வரும் வர்மம் என்னும் மருத்துவத்துறை தொடர்பான நூல்களும்கூட அகத்தியர் பெயராலேயே வழங்கப் படுகின்றன. தற்பொழுது கிடைக்கும் முக்கியமான அகத்தியர் வைத்திய நூல்கள் அகத்தியர் பெருந்திரட்டு, அகத்தியர் நயனவிதி, அகத்தியர் 1,200, வைத்திய காவியம் 1,500, வைத்திய வல்லாதி 300, வைத்திய ரத்தினச் சுருக்கம், அகத்தியர் 21,000, அகத்தியர் 2,000, அகத்தியர் இரண வைத்தியம், அகத்தியர் குருநாடி, அகத்தியர் கன்மகாண்டம், அகத்தியர் சாஸ்திரவிதி போன்றவை.

அகத்தியர் நாடி, அகத்தியர் குருநாடி போன்ற நூல்கள் நோய்களை 4,448 என வகைப்படுத்துகின்றன. மேலும் வாதநாடி, பித்த நாடி, கபநாடி, முக்குற்ற நாடி, தொந்த நாடி, குருநாடி இவற்றை அறியும்

விதங்கள்பற்றியும், இவற்றின் மாறுபாடுகளால் ஏற்படும் நோய்களைப் பற்றியும் தெளிவாகக் கூறுகிறார். மரணக்குறிகள்பற்றியும் பல பாடங்கள் இந் நூலில் உள்ளன.

அகத்தியர் இரண வைத்தியம் கட்டி, கழலை, மூலம், பவுத்திரம், கிரந்தி, காலாணி, புற்று, கடுவன் போன்ற நோய்கட்கு ஆயுதங்களைக் கொண்டு அறுவை சிகிச்சை செய்யாமல் மருந்து முறைகளாலேயே குணப்படுத்தக் கூடிய பல மருத்துவ முறைகளைக் கூறும் நூலாகும். அனைத்தும் மிக எளியமுறைகளாகவும், தற்காலத்தில் அனைவராலும் எளிதில் செய்து பயன்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளன.

அகத்தியர் செந்தூரம் 300 என்னும் நூல், உலோக உபரச பாடாணங்களைக் கொண்டு செய்யப்படும் பல்வேறு செந்தூர முறைகளை விளக்குகிறது. இந் நூல் அகத்தியர் தம் சீடரான புலத்தியருக்கு உபதேசம் செய்வது போன்ற நடையில் அமைந்திருக்கிறது. இதனை,

*"செப்பினேன் உனக்காகப் புலத்தியனே அய்யா*
*தீராத குன்மமெல்லாம் சேரத் தீரும்"*
*"மடக்குமடா புலத்தியனே உனக்குச் சொன்னேன்"*
*"கேளப்பா புலத்தியனே சிந்திகைப்பு கேட்டதில்லை"*
*"செய்யடா புலத்தியனே ஈசா னத்தில்"*

என்னும் சொற்றொடர்களால் அறியலாம்.

அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம் எளிமையான பல மருந்து செய்முறைபற்றிக் கூறும் நூலாகும். அகத்தியர் 2000, சில நோய் களுக்கான குறிகுணங்களையும் பல மருந்து செய்முறைகளைப் பற்றியும் கூறும் நூலாக அமைகிறது.

அகத்தியர் நயனவிதி 500 என்னும் நூல், கண்ணில் தோன்றக்கூடிய 96 நோய்களைப்பற்றியும், அதற்குண்டான அறுவை மருத்துவ முறை, உள், வெளிப் பிரயோக மருந்து முறைகளைப்பற்றியும் கூறும் நூலாக உள்ளது. மேலும், பொதுவாகக் கண்ணின் லட்சணம், கண்ணைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள், கண்ணில் நோய் உண்டாவதற்கான காரணங்கள் போன்றனவும் விளக்கமாகக் கூறப்படுகின்றன. மேலும், கண்ணில் அறுவை மருத்துவம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பல வகையான கருவிகளின் அமைப்பு, அவற்றின்

அளவுகள்பற்றிய பாடல்கள் அகத்தியரின் திறமையைப் பறை சாற்றுவனவாக அமைந்துள்ளன.

விலிசம் என்னும் கருவிகொண்டு கண்ணில் வளரும் நாகபடலத்தை எடுக்கிற முறையை,

*"கருத்தாய் விரியிற் கடையுற்றுக் கறுத்த சோதி யதனுள்ளே*
*மருவாய் வெள்ளை மேலோடி மருவிச் செந்நூ லதுஒப்பாய்*
*உருவாய் மேனி திரண்டு செல்வோர் உரித்த தோல்தன் தசைபோல*
*வெருவாய் வந்த நற்கண்ணில் விலிசங் கொண்டே உரியாலே*

*விலிசங் கொண்டே உரித்தபின்னர் வினவிக் கிரியை நீகேளாய்*
*தெளியும் படியே நெய்கொண்டு திலங்க ஒத்தித் தானொழுக்குப்*
*புளியந் துளிரும் பூலாவேர் புதிய தோல்தன் னுடனேநீ*
*தெளியச் சீனி முலைப்பாலின் தியங்க நறுக்கி வார்த்திடுமே"*

என்னும் பாடலின் மூலமாக விளக்குகின்றார். அதாவது கடைக் கண்ணிலிருந்து உண்டாகி வெள்ளைவிழியின்மேல் படர்ந்து சிவப்பு நூல்போலத் தோன்றிச் சதை போலத் தடித்துக் கறுப்பு விழியையும் கடந்து ஜோதிக்குச் சமீபத்தில் எட்டிப் பார்க்கும். இதை விலிசம் என்னும் ஆயுதம்கொண்டு உரித்தல் வேண்டும். உரித்த பின்னால் நெய் ஒத்தடம் செய்தும், கண்ணிற்கு நெய்விட்டும் புளியங் கொழுந்து, பூலாவேர் இவற்றோடு புதிய தேனைக் கூட்டி நசுக்கிப் பிழிந்து தாய்ப்பாலும் சேர்த்துக் கண்ணிலிட வேண்டும்.

இதேபோன்று கண்ணில் குடோரி வைத்திய முறை எனப்படும் பித்த காசத்திற்குண்டான அறுவை சிகிச்சை முறை முதலியனவும் இந் நூலில் கூறப்படுகிறது.

இவ்வாறு மருத்துவ முறை மட்டுமல்லாது அறுவை மருத்துவ முறையிலும் சிறந்து விளங்கியவர் அகத்தியர் ஆவார்.

இன்னும் அகத்தியரால் எழுதப்பட்ட பல மருத்துவ நூல்கள் நமக்குக் கிடைக்காமல் இருக்கலாம். கிடைக்காத இந் நூல்களையும் சேர்த்து அதன் முழுப் பயனையும் அனைத்து மக்களும் அடையச் செய்ய வேண்டியது தமிழர்களாகிய நம்முடைய முக்கியமான கடமையாகும்.

## மேற்கோள் நூல்கள்


மாதவன், சூல் மருத்துவம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

அகத்தியர் நயன விதி

அகத்தியர் சஸ்திர விதி

அகத்தியர் செந்தூரம்

அகத்தியர் 2,000

அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம்